www.tamilarangam.net

# வைகறை

வைகறை - வருடம் -1 விடியல் - 1 ஐப்பசி - 1990



தமிழ் கைதிகளின்!

தங்காலை சிறையுடைப்பு எப்படி நடந்தது ?

- அடுத்த இதழில்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஐரோப்பாவில்
செல்வம் அச்சகம்

நம் தமிழ் மக்களிற்கு
100% அச்சுச் சுதந்திரத்தை
தமிழ், ஆங்கிலம் மற்றும் சில
ஆசிய மொழிகளிலும்

விரும்பிய வர்ணங்களில்

24 மணி நேரமும்

உடனுக்குடன்
செய்து தரக்காத்திருக்கிறார்கள்

செல்வம் அச்சகம்
160-162 Sixth Avenue
Manor Park
London E12 5PU.
U.K.

**Tel : 081 - 478 6766.**
**Fax : 081- 514 3383.**

உங்கள் தேவை

எங்கள் சேவை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வைகறையின் பேனாவிலிருந்து ........

**இ**லங்கையில் சுதந்திரம் என்கிற போலிப்பலகை கட்டி தொங்கவிடப்பட்ட காலம் தொட்டு இன்று வரை மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை பறிப்பதிலே முழு அக்கறைசெலுத்தி வந்தமை யாவரும் அறிந்ததே.

**கா**லத்துக்கு காலம் கலவரங்களை உருவாக்குவதும்அதனைச்சாட்டாக வைத்து அப்பாவி தமிழ் பேசும் மக்களை பலி எடுப்பதும் அற்பவிடயமாகிப் போன இலங்கை அரசுக்கு இன்று ஈழத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் ஒன்றும் வியப்பானவை அல்ல. மொழியால் மதத்தால் தொழில்வாய்ப்பால் இப்படி ஒவ்வொரு துறையிலும் தமிழ் பேசும் மக்களது உரிமைகள் மறுக்கப்பட்டது மட்டுமன்றி அதனைத் தட்டிக்கேட்ட வேளையில் எல்லாம் சுட்டுப் பொசுக்கிய வரலாறுகளை யாரும் எழிதில் மறந்துவிட முடியாது.

**கொ**லை, கொள்ளை, பெண்கள் மீதான பலாத்காரம் என சமுகவிரோதச் செயல்களைப் புரிவதில் தன்னை விட உலகில் வேறு யாரும் இருக்க முடியாது என நிரூபிக்கும் சிங்கள இராணுவத்தின் காட்டு மிராண்டித்தனத்தினால் சிதறுண்டு போன எம்மக்களின் ஆற்றல்களும்,ஆக்கங்களும் கூடவே மழுங்கடிக்கப்பட்டமை ஒரு வேதனை தரும் விடயமே.

**இ**தனை நிவர்த்திக்கும் பொருட்டு மேற்குலக நாடுகளில் இலைமறை காயென மறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொணர வாய்பளிக்கும் முகமாக மாதா மாதம் வெளிவர இருக்கும் சஞ்சிகை தான் “**வைகறை**”. இவ் மாத இதழில் உங்களது ஆக்கங்களும் இடம்பெற வேண்டுமாயின் எம் முகவரிக்கு உடனே அனுப்பி வையுங்கள். தரமானவை நிச்சயம் பிரசுரமாகும்.

**VAIKARI**
**BM BOX 674**
**LONDON**
**WC 1 N 3XX**
**U.K**

கதை, கவிதை, கட்டுரை, விமர்சனம், துணுக்கு இப்படி எது வானாலும் **வைகறை** அதனை வரவேற்கும் மேலும் வாசகர்கள் இச்சஞ்சிகை தொடர்பான விமர்சனங்களை எமக்கு அனுப்பினால் அவற்றை மகிழ்ச்சியுடன் பிரசுரிப்போம்.

**இ**றுதியாக இலங்கை அரசினால் இன்னலுற்று தாங்கொணாத்துயர் சுமந்து நின்மதி நாடும் எம்தமிழ் பேசும் அனைத்து மக்களுக்கும் **இத்தீபாவழித்** திருநாளில் துயர் ஓடி நலம் காணவேண்டுமென வாழ்த்துகிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடந்த மாதத்தில் நடந்தவை என்ன? இலங்கையின் இன்றைய நிகழ்வுகள்!

**அம்பாறை:**

இதுவரை 165 தமிழ் பேசும் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் இவர்களில் பெரும்பாலானோர் ஊர்காவல் படையினரால் கொல்லப்பட்டவர்களாகும். 1000 குடும்பங்களுக்கு மேல் அகதிகளாய் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். சிங்களக் குடியேற்றம் இப்பகுதிகளில் வேகமாக்கப்பட்டுள்ளது.

**வவுனியா:**

வவுனியா என்ற பெயர் மாற்றப்பட்டு "கஜபாகுபுர" என சிங்களத்தில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. வவுனியா நகரப்பகுதிகளிலும் அதனை அண்டி உள்ள இடங்களிலும் சுமார் 76 பேர்வரை உயிருடன் எரிக்கப்பட்டுள்ளனர் 260 பேர்வரையில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். வவுனியா ஆஸ்பத்திரி தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. அகதிகளாய் இடம் பெயர்ந்தோர் தொகை 20,000.

**யாழ்ப்பாணம்:**

இதுவரையில் போராளிகள் பொதுமக்கள் இருபாராரிலும் சேர்த்து சுமார் 620 பேர்வரை கொல்லப்பட்டுள்ளனர். யாழ் ஆஸ்பத்திரி குண்டுவைத்து தகர்த்தப்பட்டுள்ளது. அலுவலகங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகம், மற்றும் வீடுகள் யாவும் விமானத் தாக்குதல்களினால் சேதமாக்கப்பட்டுள்ளன. அகதிகளானோர் விபரம் 35044 குடும்பங்கள். சில சிறுவர்கள் உணவின்றி இறந்ததாக தகவல்கள் கிடைக்கின்றன.

**மட்டக்களப்பு :**

ஆஸ்பத்திரி தரைமட்டம், 2574 பேர்வரை கொல்லப்பட்டுள்ளனர் (480 பேர் முஸ்லிம் தமிழ் பேசும் மக்கள் ) பொதுஸ்தாபனங்கள் வீடுகள் பாடசாலைகள் யாவும் தரைமட்டம். கல்முனையில் இருந்து வந்த தகவலின் படி ஒரு கடையினுள் எரியுண்ட நிலையில் சுமார் 15 பேர்வரை உள்ளதாக இன்னோர் செய்தி ஊர்சிதம் செய்கிறது.

**கிளிநொச்சி :**

இறந்தோர் விபரம் 180. 20,000 பேர்வரை வெளிமாவட்டங்களுக்கு அகதிகளாய் இடம் பெயர்ந்துள்ளனர்.

**திருமலை:**

600 பேர்வரை சுட்டுக் கொலல்ப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் ரயர்களை கழுத்தில் மாட்டி விட்டு தீயிடப்பட்டு கொல்லப்பட்டதாய் நேரடியாய் பார்த்தோர் தகவல் தெரிவிக்கின்றனர். 9000 பேர்வரை அகதிகளாய் இடம் பெயர்ந்துள்ளனர். நகர்பகுதியைத் தவிர மற்றைய இடங்களில் எல்லாம் ஊர் காவற்படையின் அட்டகாசம் நடை பெறுவதாக அறியக்கிடக்கிறது.

**முல்லைத் தீவு:**

அரச வைத்திய சாலை தரைமட்டம் விமானப் படையினர் தாக்கியதில் இரு நோயாளிகள் இறந்து விட்டனர் பாடசாலைகள் இயங்கவில்லை, 22000 பேர் வரை யாழ்நகருக்கு அகதிகளாய் இடம் பெயர்துள்ளனர் முள்ளியவளை, தண்ணீர் ஊற்று பகுதிகளே பலத்த சேதத்திற் உள்ளாகி உள்ளன. மன்னார் மாவட்ட விபரங்கள் தெளிவாகத் தெரியவில்லை

**இந்தியா:**

இலங்கையில் இருந்து அகதிகளாய் ஒரு இலட்சத்து ஆறாயிரம் பேர் போய் உள்ளதாய் தமிழ் நாடு அரசு அறிவித்துள்ளது. ஒவ்வொரு நாளும் ஆயிரத்திற்கு மேற்பட்டோர் வந்து கொண்டு இருப்பதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொடக்கத்தில் ஒன்று முடிவிலே மூன்று !

சிலர் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தனர். அந்த வயோதிபர் வழமை போலவே மூலைச்சுவரில் சாய்ந்த வண்ணம் சிந்தனையில் ஊறிப்போயிருந்தார். சுந்தரம் வழிந்தோடிய கண்ணீரை சாரத்தின் ஒரு பகுதியினால் துடைத்த வண்ணம் ஜன்னலினூடாக எதனையோ பார்த்துக் கொண்டிருந்தான். மின்குமிழுக்கு கீழே படுத்திருந்ததினால் நித்திரை கொள்ளமுடியாது தவித்துக் கொண்டிருந்தான் ஆனந்தன். சிலர் இன்னோர் மூலையில் இருந்து இரகசியமாய் ஏதோபேசிக் கொண்டிருந்தனர். மயான அமைதி நிலவும் அங்கே நுளம்புடன் போராடிக் கொண்டிருந்தான் சாந்தன். அவனுக்கு இன்றிரவு தூங்க முடியவில்லை. அவனால் தூங்கவும் முடியாது. எத்தனை நாட்கள் ஒன்றா? இரண்டா? மூன்று வருடங்கள். ஒவ்வொரு நாட்களும் அவனுக்கு கொடுத்த துன்பங்கள் அவனுக்கு மட்டுமே புரியும். வேதனை என்பதை எழுத்திலே படித்து அறிந்ததைவிட நேரடியாக அறிந்த அனுபவங்கள்தான் அவனுக்கு அதிகம். இத்தனை வருடங்களை இருட்டிலே விரட்டிய அவனுக்கு இந்த இரவு மட்டும் ஒரு யுகம் கழிவது போல இருந்தது. பூட்டிய விலங்குகள் நாளை திறக்கப்பட போகின்றன. நாளை காலையில் அவன் கைவீசி நடக்கப் போகின்றான். அந்த விடிவு தன் வாழ்க்கையிலும் ஒரு விடிவை கொணரும் என மனம் மகிழ்ச்சி அலைகளிலே மோதிக்கொண்டிருந்த அதேவேளை, என்னைப் போலவே நாட்களை எண்ணி , எண்ணி விரக்தியின் விளிம்பிலே நிற்கும் அந்த உள்ளங்கள் நாளை மேலும் ஒரு படி வேதனைக் கடலிலே நீந்தப் போகின்றனவே என்பதை நினைத்த போது நாளை விடியாமலே இருந்து விடக் கூடாதா என்று கூடத் தோன்றியது.

பாவம் சோதி ஐயா அறுபது வயதிலே இப்படி இருக்கவேணும் என்ற விதி. நாலு பெண் பிள்ளைகளின் வாழ்க்கையின் வச்சிரத்தூண் அவர். மனைவி எழுந்து நடமாட முடியாத சுகயீனக்காரி. சோகத்தின் சொந்தக்காரனான சோதி ஐயாவின் வாழ்க்கை இப்படியாகக் காரணம் என்ன. இயக்கத்தில் இருந்த ஒருவனுக்கு ஒரு வேளை உணவு போட்டது. அதற்காக அவர் குடும்பம் நடுத்தெருவிலே ஒரு வேளை கஞ்சிக்கு திண்டாடுகிறது .அன்று ஒரு நாள் சோதி ஐயாவைப் பார்வையிட வந்த முத்த மகள் சிந்திய கண்ணீரும் புலம்பலும் இன்றும் சாந்தனுக்கு கண்முன்னே படமாக ஓடியது. பசிக்குதையா, அக்கம் பக்கம் கடன் கூடத் தாராங்களில்லை, அந்த இரண்டு வசனங்களும் சாந்தனுக்கு இன்னும் மறக்கவில்லை. கண்களை மூடியிருந்தாலும் தூக்கமின்றித் தவித்த சாந்தனுக்கு அங்கு இருந்த இருநூற்று ஐம்பது பேரினுடைய வாழ்க்கை அவலங்கள் ஒன்றன்பின் ஒன்றாக படமாக ஓடின.





புவனதாசன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாந்தன் திருமலை மாவட்டத்தைச் சேர்ந்தவன். மாரடைப்பு வியாதிக்கு தந்தையை அர்ப்பணித்து விட்டு குடும்பத்தின் தலைப் பிள்ளையாய் நிற்கும் அவனுக்கு இரண்டு சகோரிகள். மூத்தவள் தீபா. திருமண வயதிலே சீதண நோய்வாய்ப்பட்டிருப்பவள். அடுத்தவள் காலம் தாழ்த்தி பிறந்த கடைக்குட்டி கார்த்திகா. தோட்டத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தினால் வாழ்க்கை ஓட்டும் அவர்களின் முதுகெலும்பு அம்மா லக்ஸ்மி.



சாந்தன் அப்போது பதினேழு வயதிலே பவனி வந்த இளைஞன். நகரிலே உள்ள பாடசாலை ஒன்றில் பயின்று கொண்டிருந்த அவனின் நடவடிக்கைகள் ஒவ்வொருவரையும் கவரும். கல்வியிலே விளையாட்டிலே என்று எதிலும் சிறப்பாக இருந்த அவனின் வாழ்க்கையில் வீசியது புயல். வீசிய கரங்களுக்கு தடை போட்டது அந்த நாள். விலங்கிட்டு வேதனை கொடுத்தது அந்த நாள்.

ஆம் அன்றொரு நாள்..... ஒரு வெள்ளிக் கிழமை. பாடசாலை வழமைக்கு மாறாக அன்று வேளைக்கு முடிந்து விட்டது. பாடசாலையில் இருந்து பத்து மைல்களுக்கப்பால் வசிக்கும் அவன் ஒவ்வொரு நாளும் பஸ்ஸில் போய்வருவது வழக்கம். அன்றும் அவன் பஸ் நிலையத்தில் காத்து நின்ற போது......

'திங்கள் கிழமையில் இருந்து ஒரு கிழமைக்கு பள்ளிக்கூடங்களை பகிஸ்கரியுங்கோ"சத்தம் கேட்டு பாடசாலை பிரதானவாயில் நோக்கித் திரும்பினான் சாந்தன் இரண்டு ஏதோ இயக்கத்தை சேர்ந்த இளைஞர்கள் துண்டுப்பிரசுரம் விநியோகித்து கொண்டிருந்தார்கள் இயக்கம் பற்றிய விடயங்களில் சாதாரணமாகவே ஈடு பாடுடைய அவனுக்கு இது சொல்லவும் வேண்டுமா? தெருவை குறுக்கிட்டவாறே அந்தமாணவக் கும்பலினூடே தனக்கும் ஒரு துண்டுப்பிரசுரத்தை புகுந்து வாங்கினான்

"மாணவர்களே ! எமது அமைப்பின் ஒரு தோழன் இராணுவத்தினால் சுடுபட்டு இறந்து விட்டான் . திருமலையை சேர்ந்த அந்த வீரனுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக ஒரு வாரத்திற்க்கு பாடசாலைகளை பகிஸ்கரியுங்கோ" துண்டுப்பிரசுரத்தை வாசித்துக் கொண்டு பஸ் தரிப்பை நோக்கி நடந்தான் .

மறுகணம் அங்கே அவனது வாழ்க்கையின் சோக வரலாறுக்குரிய முன்னுரை எழுதப்படத் தயாராய் இருந்தது. இளைஞர்கள் துண்டுப்பிரசுரம் விநியோகிப்பதை அறிந்து கொண்ட அப்பகுதி இராணுவம் உடனே அந்த இடத்துக்கு விரைந்தது.இயக்க உறுப்பினர்கள் தப்பிவிட்டார்கள்.கைகளிலே நோட்டீஸ் உடன் நின்ற சாந்தன் கைது செய்பட்டான் .

இராணுவ முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்ட பின் பலவித சித்திரவதைக்கு ஆளான அவன் வெலிக்கடை சிறையிலே அடைக்கப் பட்டான்.பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்ட அவனுக்கு அவன் வீட்டினருடனோ வேறுயாருடனோ தொடர்பு கொள்ள அனுமதிக்கப்படவில்லை. ஒரு நாளைக்கு ஒரு முறை தான் சாப்பாடு .அதுவும் ஆறு அவுன்ஸ் பாண் எரிகாயங்கள் வெடித்து வீங்கிய கண்டல்கள் அவன் உடல் எங்கும் இதே கோலம். தன்வீட்டினருக்கு என்ன நடந்தது. அவர்கள் எங்கே எப்படி இருக்கிறார்கள் என்பது எதுவுமே தெரியாது அவனுக்கு.

"அம்மா ..........என்ரை அம்மா .........ஓலமிட்டு கத்திய பிரபுவின் சத்தம் கேட்டு சிந்தனைகளில் இருந்து விடுபட்டான் சாந்தன். பிரபு அவனைப் போலவே அண்ணன் இயக்கம் என்ற காரணத்திற்காக சிறைப்படுத்தப்பட்டவன் ஆமி அடித்ததிலே நெஞ்சின் ஒருபக்க எலும்பு உடையுண்ட அவனுக்கு இப்படி அடிக்கடி நோ ஏற்படுவது வழக்கம்., முல்லைத்தீவை சேர்ந்த பிரபுவுடன் நெருங்கிப் பழகியவன் சாந்தன். அவனுக்கு வலி வருகின்ற வேளைகளில் எல்லாம் கூட இருந்து முடியுமானவற்றை செய்பவன் சாந்தன். அவனின் அழுகுரல் கேட்டு படுக்கையில் இருந்து எழுந்து அவனருகே போனான்.

"என்ன பிரபு வலிக்குதா மச்சான்" யோசிக்காதை அது சின்ன நோதான் விடிய சுகமாயிடும் இந்தா இரண்டு பனடோல் இருக்கு இதைப் போடுகொஞ்சம் சுகமாய் போகும் .

"நாளைக்கு நீ போறாய் சாந்தன் . எனக்கு இனி யார் இருக்கினம் என்னைப்பார்க்க" கண்ணீர் துளிகள் தலையணையுடன் சங்கமிக்க அடைத்த குரலில் கூறினான் பிரபு .

"இல்லை மச்சான் இங்கை செழியன் இருக்கிறான் துளசி இருக்கிறான் தன்மனதுக்குள் விளைந்த துக்கத்தை வெளிக்காட்டாது சமாளித்தான் சாந்தன் " வெளியிலே போய் ஒரு கடிதமாவது என்ரை வீட்டுக்கு மறந்திடாமல் போடு மச்சான் அம்மா என்ன பாடு படுறாவோ தெரியாது.......விம்மியபடி கூறினான் பிரபு ஆம் என்பதுக்கு பதிலாக தலை அசைத்தான் சாந்தன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடிந்து விட்டது அன்றைய தினம் மட்டும் மல்ல அவனின் இருண்ட வாழ்கையும்தான் விடுதலைப்பத்திரம் அவனது கரங்களில் ஒப் படைக்கப் பட்டுவிட்டது. ஒவ்வொருவருக்கும் கை அசைத்து விடை பெறத் தயாரானான் சாந்தன் சிலர் அழுதனர் , சிலர் கண்கலங்க போய் வருக என்றனர் . இரண்டு காவல்த்து றையினர் கதவுகளை திறந்தார்கள் இன்று அவன் கரங்களில் விலங்கு இல்லாமல் வெளி யேபோகிறான்.

கொழும்பு நகரை அடைந்து விட்டான் அங்கிருந்து அவன்திருமலைக்குபோகும் ஒரு மினி பஸ்ஸிலே ஏறினான் . பஸ் தனது கடமை யை ஆரம்பித்தது. ஒவ்வொரு தரிப்பிலும் அது நின்றபோதெல்லாம் அவனுக்கு எரிச்ச ல்தான் வந்தது. கொழும்பிலிருந்து தனதூ ரில் உள்ள தபால் நிலையத்துக்கு தொலை பேசியில் தொடர்பு கொண்டு தான் விடுதலை யான செய்தியை முதலே அறிவித்திருந் தான் சாந்தன்.

பஸ்வண்டி திருமலையை அடைந்துவிட் டது. பஸ்சை விட்டு இறங்கி தன் ஊரை நோக் கி விரைந்தான் அவன். அவனா அப்படி நடக் கிறான்? அவனால் தன்னையே நம்பமுடியவி ல்லை.

என்ரையம்மா...அக்கா,தங்கச்சி....ஒவ்வொ ருவரின் பேரை சொல்லி ஓலமிட்டான் அவன். அந்த இடத்தில் கூட்டம் குழுமியிருந்தது. கத றிக் கதறி அழுதான் சாந்தன். அவனுக்கு அதனை நம்பமுடியவில்லை. எனக்கா இந்த நிலை. தலையிலே கைகளை வைத்தபடி அழுதான்.

ஆம். சாந்தனை அழைத்து போக பஸ் நிலையம் வந்திருந்த அவனது தாய் இரண்டு சகோதரிகள் மூவரும்சூட்டுக்காயங்களுடன் இறந்து கிடந்தார்கள். கூட்டத்திலே நின்றவர் ஒருவர் சொன்னார். நகரிலே எங்கோ ஏற்ப ட்ட கண்ணிவெடித் தாக்குதலைத் தொடர்ந்து எயாபோஸ் ரவுணிலை வந்து சனங்களைச் சுட்டவங்கள் அப்பதான்..........

*ஒரு வாழ்க்கை தொடங்கும் போது மூன்று முடிவுரையை முடித்துக் கொண்டன.*

## கணப்பொழுது குறுக்கெழுத்துப் போட்டி நீங்களும் பத்து பவுண்களுக்கு (£10) உரிமையாளர்களாகலாம்.

போட்டி விதிகள்

1) பங்கு பெறுபவர் 14 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும்.
2) விடைகள் தேளிவாக இருத்தல் வேண்டும்.
3) விடைகள் கார்த்திகை 5ந் திகதிக்கு முன் அனுப்பப்பட வேண்டும்.
4) ஒருவர் ஒரு விடை மாத்திரமே அனுப்ப வேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | ■ |
| 19 | 20 | 21 | 22 | ■ | ■ |
| 25 | 26 | 27 | ■ | 29 | 30 |
| ■ | ■ | 33 | 34 | 35 | 36 |

* இடமிருந்து வலமாக *

1)பகல் என்பதன் எதிர்சொல்
4)திருமணமாகாத பெண்ணைக்குறிக்கும்
8)திருமணமானோர் சிலர் நாடுவது
14)இச்சேவையை பலர் விரும்புவர்
19)இருக்கக் கூடாதது
25)தங்கத்தை இப்படியும் சொல்வர் (குழம்பி வரும்)
29)காதலர் வேண்டுவது (குழம்பி வரும்)
33)தபாலில் காணலாம்

*மேலிருந்து கீழாக*

1)நிஜபத்தின் ஒத்த பொருள்
2)கலைஞருக்கு தேவை
11)சீலை என்றும் சொல்வர்
29)வணங்குவதை சொல்வர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்திய மேலாதிக்கமும் தமிழ் பேசும் மக்களின் விடுதலையும்..........

இன்றும் என்றும் இந்தியா இலங்கை தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டி வருகிறது. இலங்கை மீதான இந்த அக்கறை அண்டை நாடு என்றவகையில் உதவி புரியவா? அன்றி தனது மேலாதிக்கத்தினை நிலைநாட்டவா? இந்தியா வெவ்வேறு கட்டங்களில் பெரிய பெரிய பிரயத்தனங்கள் மேற்கொண்டது!. இது தொடர்பாக இந்தியாவைப் பற்றிய ஆய்வு எம்மிடையே அவ்வப்போது நடைபெறாதுவிட்டால் நாம் இந்தியாவை முழுமையாக அடையாளம் காணத்தவறியவர்களாய் விடுவோம். இந்தியா எப்படித் தமிழ் பேசும் மக்களின் விடுதலையுடன் தொடர்புபடுகின்றது என்பதை நோக்க முன் இந்தியாவின் சிலபழங்கதைகளை சற்று புரட்டுவது நல்லதென நான் நினைக்கிறேன்.

1947இல் இந்தியாவானது ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து விடுதலை அடைகின்ற வேளையில் பாகிஸ்தான் மதரீதியான குழப்பங்களிலிருந்து பிரிந்து சென்றது பாகிஸ்தான் பங்களாதேஷ் (கிழக்கு பாகிஸ்தான்) ஆகிய இவ்விரு நாடுகளிடையே எந்த ஒரு பூகோள ரீதியான தொடர்பும் இல்லாது தனி மதரீதியான (இஸ்லாம்) ஒற்றுமையில் பாகிஸ்தான் என்ற ஒரு நாடாக உருவாகியது. பிரிவினையின் போது மதக்கலவரத்தால் ஏறத்தாழ ஐந்து இலட்சம் பேர்கள் உயிரிழந்தனர். அண்ணளவாக ஒரு கோடி மக்கள் இந்திய எல்லையிலிருந்து பாகிஸ்தானுக்கோ இன்றேல் பாகிஸ்தான் எல்லையில் இருந்து இந்தியாவிற்கோ அகதிகளாய் இடம் பெயர்ந்தார்கள்.

பாகிஸ்தானின் சகல அரசியல் இராணுவ அதிகாரங்களும் ஏமு வீதமான உருது மொழி பேசும் மக்களைச் சென்றடைந்தது.1952ல் பாகிஸ்தானிய அரசானது உருது மொழி ஒன்றே இஸ்லாமிய தேசிய மொழியாகப் பிரகடனப்படுத்தியது. இதனைத் தொடர்ந்து மொழி ரீதியான கலவரங்கள் பங்களாதேசில் உருவாகத்தொடங்கின. அத்துடன் வங்க மொழி கலாச்சாரங்களைப் பேணுவதற்கான அமைப்புக்களும் படிப்படியாக ஆரம்பித்தன. மேலும் 1954இல் மாகாண எல்லைகள் கலைக்கப்பட்டு பாகிஸ்தான் முழுவதுமான ஒரே அதிகார பரிபாலனைக்குள் சட்டமயப்படுத்தப்பட்டது. இந்த தனித்துவமான ஒரு அரச நிர்வாகத்தினை எதிர்த்து நாடடங்கிலும் 1955இல் இருந்து 1970 வரையில் தேசிய ரீதியிலான பிரச்சனைகள் எழத்தொடங்கின. 1969 இல் அமுலில் இருந்த மார்ஷல் சட்ட அரச (MARTIAL LAW ADMINSTRATION) நிர்வாகம் முறிவுறும் போது புதிய இராணுவ அதிகாரமானது ஜெனரல் யெய கான் (Yahya Khan) தலைமையில் அதிகாரத்தினை சுவீகரித்தது 1970இல் தேர்தல் நடாத்தப் போவதாகவும் மக்களாட்சி நடாத்தப் போவதாயும் கூறியது. அத்துடன் கார்த்திகை 1969இல் யெயகான் தனித்துவமான அரசுபரிபாலனை அமைப்பை உத்தியோக பூர்வமாகக் கலைத்தார். இருந்தும் தேசிய இனங்களுக்கிடையிலானபிரச்சனைகள் தீர்க்கப்படவில்லை.


1970 இல். நடைபெற்ற தேர்தலில் முஜிபூர் ரகுமானுடைய (Sheikh Mujibur Rahman) கட்சியான அவாமிலீக் கட்சியானது பங்களாதேசில் 169ஆசனங்களில் 167 ஆசனங்களை பெற்று அமோகமாக வெற்றியீட்டியது. பாகிஸ்தானை எடுத்துக்கொண்டால் இதுவே அதிகமான ஆசனங்களை கொண்ட ஒரு கட்சியாக காணப்பட்டது. எனவே அவாமிலீக் கட்சி ஆளும் கட்சியாகவும் முஜிபூர் ரகுமான் பிரதமமந்திரியாகவும் வரவேண்டும். ஆனால் பாகிஸ்தானிய இராணுவத் தல்லமைகள் அதிகாரத்தினை விட்டு க்கொடுக்கத் தயாராக இருக்கவில்லை. இராணுவ அதிகாரத்தின் கருவியான அலிபூட்டோ வினது (ZULFIKAR ALI BHUTTO)கட்சியான பாகிஸ்தானிய மக்கள் கட்சி (Peoples party) சிண்ட (Sindh) பஞ்சாப் (Punjab) ஆகிய மாநிலங்களில் இருந்து பாராளுமன்றத்திற்கு 81 ஆசனங்களைப் பெற்றிருந்தது. இதற்கிடையில் மாநிலங்கட்கு அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு கூட்டாட்சியை முஜிபூர் ரகுமான் கொண்டு வர இருப்பதை மறுப்பதுடன் முஜிபூர் பிரதமராக வர முடியாது எனவும் அப்படி வந்தால் பாராளுமன்றத்தினை தாம் பகிஸ்கரிக்கப்போவதாயும் பூட்டோ வெளியிட்டார்.

(கோபு)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




மார்ஷல் சட்ட அதிகாரிகள் 1971 ஆம் ஆண்டு பங்குனி முதலாம் திகதி அன்று அதே மாதம் மூன்றும் திகதி நடைபெற இருந்த தேசிய பாராளுமன்றக்கூடுகையை காலவரையறையின்றி பின்போட்டார்கள். இதனைத் தொடர்ந்து வங்காள தேசத்தில் கலவரங்கள் மூண்டன.அத்துடன் தனிநாட்டுக் கோரிக்கையானது பலம் வாய்ந்த இராணுவத் தன்மை கொண்ட மாணவர் சங்கத்தினால் (Student Federation) வெளியிடப்பட்டது. இதே சமயத்தில் பாகிஸ்தானிய இரணுவத்தலைவர்கள் அவாமிலீக் கட்சியுடன் புதிய பேச்சுவார்த்தையில் இறங்குவதாகக் காட்டிக்கொண்டு பங்குனி மாதம் 25ம் திகதி இரவு தனது இராணுவத்தினை வங்கதேசத்தின்மீது கட்டவிழ்த்து விட்டது. கவச வாகனங்களும் கனரகவாகனங்களும் டாக்கா தலைநகரில் இரக்கமற்ற முறையில் கொலை கொள்ளைபெண்கள் மீதான பலாத்காரம் போன்றவற்றை தனது இராணுவ தனித்துவத்தால் உலகுக்கு காட்டியது. இந்த 25ம் திகதி வங்க மக்களினால் ஒரு கறுப்பு இரவாக நினைவு கூரப்படுவது இங்கே குறிப்பிட வேண்டியதாகும்.

இதே வேளையில் இந்தியாவைப் பார்க்கும் போது உலகில் ஏழாவது பெரிய நாடும் இரண்டாவது சனத்தொகை கூடிய நாடுமாகும். அதுமட்டுமன்றி கிழக்காசியாவிலே தன்னை ஒரு பிராந்திய வல்லரசாக அமைப்பதற்கு முற்படுகின்ற நாடுமாகும். இதன் எல்லைப்புற அமைவை நோக்கையில் வடக்கே சீனா, நேபாளம், பூட்டான் வடமேற்கே பாகிஸ்தான், கிழக்கே வங்காளம், தெற்கே இந்தியாவின் தமிழ்நாடு மானிலத்திற்கு அருகே இருக்கும் இலங்கையும் குறிப்பிடத்தக்கது.

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையே சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே மத அரசியல் ரீதியான பிரச்சனைகள் தொடர்ந்துகொண்டே இருந்தன. இதன் மூலம் தன்நாட்டுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் பாகிஸ்தானை பலவீனப்படுத்துவது அவசியமென இந்தியா உணர்ந்தது. இதற்கு சாதகமாய் பங்களாதேசத்தினை மேற்கு பாகிஸ்தானிடமிருந்து பிரித்து விடுவதற்குரிய சந்தர்ப்பம் மேற்சொன்ன பிரச்சனைகள் மூலம் இந்தியாவிற்கு கிடைத்துவிட்டது. அதே வேளை பிரியவிருக்கும் பங்களா தேசத்தின் மீது தனது முழு ஆதிக்கத்தினை நிலைநாட்ட வேண்டிய அவசியத்தினையும் இந்தியா உணர்ந்து கொண்டது. பங்களாதேச விடுதலைப் போராட்ட காலத்தில் சீனாவினால் ஆதரிக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சிகள் தன்னிச்சையான போராட்ட சக்திகள் மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கினைப் பெற்றிருந்தமை ஒரு முக்கிய காரணமாகும்.

தொடரும் - 10 ம்பக்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போதி மரச் சோதி சொன்ன

அன்பும் இல்லை அறமுமில்லை எங்கள் நாட்டிலே
அனுதினமும் அல்லலிங்கு ஓயவில்லையே
பண்புமில்லை நல்கருத்துமில்லை இலங்கை வீட்டிலே
நின்மதியைத் தேட ஒரு வழியுமில்லையே
நேர்மையில்லை நியாயமில்லை ஈழமண்ணிலே
இதயங்கள் இங்கு உறங்கவில்லையே
உண்மையில்லை உறக்கமில்லை ஏழைமாந்தரே
இயம்பியிதைக் களைத்து விட்ட இளைஞர் நாங்களே.

புத்தர் சொன்ன போதனைகள் ஒரு புறத்திலே
போற்றிவழிபாடு அது அரசடியிலே
செத்துச் சனம் மடியுதிங்கே வெடிகள் குண்டிலே
சித்தம் கலங்கி வாழுதுபார் ஒடுங்கி வீட்டிலே
பத்துமாத குழவியதும் பாடை தன்னிலே
வயிறுபற்றி எரியுதந்தத் தாயிடத்திலே
கத்தி கத்தி அழும் அவர்கள் பிணத்தின்மீதிலே
ஆசை கொண்டதென்ன இந்த மனுநரிகளே.

தாலிலிட்ட கணவன் தலை சிதறிப்போனதே
இரத்த வெள்ளம் ஆறெனவே பெருக்கெடுக்கவே
கூலிப்படை செய்யும் அந்த நாச வேலையால்
மங்கை அவள் இல்லம் இங்கே அழுகைக் கோலமே
கதறியழும் பூவையவள் காண்பதென்னவோ
முதலுறவை முறித்ததினால் இலாபம் கொள்ளையோ
பெற்ற மகன் சூடு பட்டுத் துடிதுடிக்கிறான் அன்னை
உணவு கண்ட நாள் மறந்து வெந்து போகிறாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சேதி என்னவோ ?

ஆறு மாதக் குழவி பாலை வேண்டி அழுகுது
அன்னையினை கொன்றனரே இரக்கமின்றியே
பசியெனவே துடித்தமகவுக் குணவு வாங்கவே
ஓடியவள் வீதியிலே பிணமாய்க் கிடக்கிறாள்
அம்மா என்று குழந்தை அழுது அலறிப் புலம்பவே
துணை இழந்த தலைவன் கண்கள் வழிந்து ஓடுதே
போதிமரச் சோதி சொன்ன சேதியென்னவோ
பொருள் மாறியிங்கே நடப்பதுவின் மாயமென்னவோ.

புத்தா நீ செத்தாய் உண்மை பூமிதன்னிலே
நேர்மையினைக் காணவில்லை உந்தன் மண்ணிலே
தத்துவமும் செத்ததோ உந்தன் மதத்திலே
சத்தியமாய் சொல்வாய் உன் சனங்களிடத்திலே
அம்பதனால் துடித்த புறா கண்டு இரங்கியே
தடவிக் கொடுத்த கதை படித்தேன் புத்தகத்திலே
என்புடைந்து வீடுடைந்து போகும் செல்லினால்
வீழ்ந்த உயிர்க்கு பொறுப்பு உந்தன் வழியில் வந்தோரே.

புவனதாசன்




தமிழ்பேசுவோனுக்கு கல்லறை ஒன்று
கட்டப்படுகிறது _ அதிலே
மண்ணுக்காய் மாண்டவனைப்
புதைக்கப்படுகிறது அவன்
புதைக்கப்படவில்லை விதைக்கப்படுகிறான்
எனவே - அவன்
மீண்டும் முளைக்கப்படுவான் _ அன்று
கருவறையில் வளர்ந்தான் _ இன்று
கல்லறையில் வாழ்கிறான் _ இவை
தான் இரண்டினதும் வேற்றுமைகள்
இதனால் தான் கூறுகிறேன்
கல்லறை கதைப்பதற்கு
காலம் வரும் _ அப்போ
தான் தமிழவனுக்கு விடிவு வரும்.

அகில்

## வைகறைக்கே !

இதுவோர் வைகறை _ இதில்
ஆயிரம் அர்த்தங்கள்
அர்ப்பணிப்பு _ அத்தனையும்
எம் இனத்தின் பங்களிப்பு
ஆராய்ந்து பார்த்தால் _ அது
ஓர் சரித்திரத்தின்
சந்திப்பு _அதற்க்காத்தான்
இவ் வைகறையின் பிறப்பு.

அகில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(இந்திய மேலாதிக்கமும்................(.தொடர்ச்சி)

இவ் சக்திகள் போராட்டத்தினை முன்னெடுத்து செல்லுமாயின் ஒன்றில் சீனா சார்புடைய நாடாகவோ அல்லது தனித்துவமான முற்போக்கு சக்திகளின் கையிலோ சென்றடையும். இதுநீண்டகாலத்தில் வளர்ந்து வரும் பங்களா தேசத்தினால் மிகுந்த அச்சுறுத்தல் இந்திய பிராந்தியத்திற்கு ஏற்படும் என எண்ணி, இந்தியா தன்னை ஒரு புரட்சிகர சக்தியாக வங்காள மக்களுக்குக் காட்டிக்கொண்டு அகதிகள் அனைவரையும் தன்பாதுகாப்பிலும் தன் முழுக்கவனத்திலும் வைத்துக் கொண்டது. இதற்கூடாக வெளியுலகுக்கு, அல்லலுறும் வங்காளத்திற்கு உதவி புரிகின்ற ஒரு சக்தியாகவும், வங்காள மக்களின் நண்பனாவும் காட்டிக்கொண்டு முஜிபூர் ரகுமானின் “அவாமிலீக்” கட்சியை ஆதரித்து அதனின் “முக்திவாகினி” என்ற படையையும் உருவாக்கி விட்டது.இது இப்படி இருக்க சர்வ தேச ரீதியில் அமெரிக்க சார்புடைய பாகிஸ்தானின் பிரச்சனையில் அமெரிக்க நேரடித்த லையீட்டை தடுக்கு முகமாக முன்னேற்பாடாக இந்திய லோக் சபாவில் மூன்றில்இரண்டு பெரும்பான்மை கொண்ட காங்கிரஸ் கட்சியின் தலைவியான இந்திராகாந்தி 1971 ஆவணி 9ம் திகதி சோவியத் யூனியனுடன் 20 ஆண்டு அம்ச உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுக் கொண்டார்.

இவ் உடன்படிக்கையில் முக்கிய பகுதி என்னவெனில் இந்தியாவிலோ அல்லது சோவியத்திலோ இராணுவ ரீதியாக பிரச்சனைகள் எழும் பொழுது இரு நாடுகளும் ஒன்றுக்கொன்று இராணுவ ரீதியான உதவி மேற்கொள்ளும். சோவியத் யூனியனானது அமெரிக்காவுடனான போட்டியில் உலகில் சமபலத்தினை பேணுவதற்கு கிழக்காசியாவில் இந்தியாவைத் தவிர வேறு எதுவும் பொருத்தமான நாடுகளில்லை என்ற வகையில் இந்தியாவுடன் மேற்குறிப்பிட்ட உடன்படிக்கையில் இறங்கியது.

1971 கார்த்திகை மாதம், பெரும்பான்மை பலம் கொண்ட இந்திராகாந்தி நாடளவிலான அவசரகாலச் சட்டத்தினை பிறப்பித்தார்.இக்காலப் பகுதியில் காஷ்மீரில் பிரச்சனை பரவத் தொடங்கியது. அத்துடன் இந்தியா 1971, மார்கழி 3ந் திகதி பாகிஸ்தானுடன் நேரடியுத்தம் பிரகடனப்படுத்தியது.மார்கழி 16ந் திகதி இந்திய துருப்புக்களினால் பங்களாதேஷின் டாக்கா தலைநகர் பாகிஸ்தானிய துருப்புகளிடத்திலிருந்து விடுவிக்கப்பட்டு பங்களாதேஷ் நாடு பிரகடனப்படுத்தப்பட்டது. இந்தியத் துருப்புக்கள் 1972, பங்குனி 12ந் திகதி முழுமையாக வங்காளத்தினை விட்டு வெளியேறினர்கள். மேற்கூறியவை உலகறிந்த நிகள்வுகள். வெளியிலிருந்து பார்க்கும் போது ஆகா! ஆகா! இந்தியாவொரு புரட்சிகர நாடு வங்காள மக்களின் விடுதலையைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றது என்று தெரிகின்றது, அத்துடன் வெளியுலகிற்கும் தன்னையொரு புரட்சிகர சக்தியென எடுத்துக் காட்டியது. ஆனால் திரைமறைவில் நடந்தது என்ன? இந்தியா தனது துருப்புக்களை வங்காளத்திற்கு அனுப்பாதிருந்தால் இரு வருடங்களுக்குள் புடச்சிகர சக்திகளினால் நாடு கைப்பற்றப்பட்டிருக்கும். இதற்கு முன்பாகவே தனக்கு தலையாட்டக்கூடிய ஓர்அரசு நிறுவுவதற்காகவே இந்தியா வங்காளத்தினுள் வெகு அவசரம் அவசரமாகப் புகுந்தது. இந்தியா வங்காளத்தில் இருந்த காலத்தில் மிகவும் கனகச்சிதமாக முற்போக்கு சக்திகளை அழித்தொழிப்பதுடன் அந்நாட்டு அப்பாவி மக்களையும் கொன்று குவித்தது. ஈற்றில் தனது பக்தனான முஜிபூர் ரகுமானை ஆட்சியில் அமர்த்தி போரில் தான் கைப்பற்றிய எந்தவொரு இராணுவ தளபாடங்களையும் அவ் நாட்டு மக்களிடம் கொடுக்காது அவ் நாட்டை விட்டு வெளியேறியது.மேலே உள்ள படிப்பினையை வைத்துக்கொண்டு எமது நாட்டை சற்று பார்ப்போம். இந்தியாவின் தலைப்பகுதியிலிருந்து இந்திய பிராந்தியத்திற்கான பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் பாகிஸ்தான், சீனா, வங்களாம் ஆகிய நாடுகளில் இருந்து வருகின்ற அதேவேளை உள் நாட்டில் காலிஸ்தான், அசாம், நாகலந்து போன்ற வெவ்வேறு மாநிலங்களில் இருந்து அரசுக்கெதிரான போராட்டங்கள் வளர்ந்து வருகின்றது

(அடுத்த விடியலில் தொடரும்.....)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாளைய தலைமுறையே வா!! வா!!

இது உங்கள் பகுதி

பெற்றோருக்கு ஒரு வேண்டுகோள்,

நாம் யார்? எமது மொழி, கலாச்சாரம் போன்ற விடயங்களும் அதனுடன் இணைந்த அறிவு வளர்ச்சியும் அந்நிய கலாச்சாரத்தினுள் கட்டுண்டு கிடக்கும் எம் சிறார்களுக்கு அவசியமான விடயமாக கருதியதால் இப்பகுதி இம்மலரில் இடம்பெறுகிறது. மேற்குலக நாடுகளில் வாழும் சிறுவர்கள் அச்சமுதாயத்துடன் இணைந்து நடப்பது தவிர்க்க முடியாததாக இருக்கின்ற பொழுதிலும் எமது சமுதாயத்தின் தனித்துவத்தினையும் நாம் பேணவேண்டியது அவசியமெனக் கருதுகிறோம். எழுதுவதிலும் வாசிப்பதிலும் சிறுவர்களுக்கு ஆரம்பத்தில் சிரமங்கள் ஏற்படலாம். ஆனால் தொடர்ச்சியான எமது முயற்சியாலும் பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் கூடிய சிறுவர்களின் ஊக்கத்தினாலும் நாளடைவில் பயன டைவார்கள் என நம்புகிறோம். இப்பகுதியினை மேலும் திறம்பட அமைக்க பெற்றோர் சிறார்களின் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

***சிறுவர் அறிவுப் போட்டி***

விதிகள்.

1. 14 வயதிற்கு உட்பட்டவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.
2. இப்பகுதியினை வெட்டி அனுப்புவர்கள் மாத்திரமே போட்டியில் பங்கு கொள்ளலாம்.

*வெற்றி பெறும் ஒருவருக்கு £10 க்குரிய காசோலைபரிசுத்தொகை அனுப்பி வைக்கப்படும்.

**சரியான விடையின் கீழ் கீறிடுக.**

✂-----------------------------------------------------------------------

**1.** ஆசியாக் கண்டத்திலுள்ள முன்று நாடுகள்

1) ஐக்கிய ராச்சியம் 2) இலங்கை 3) கனடா
4) இந்தியா 5) பங்களா தேசம்.

**2.** சேலை அணியும் பெண்கள் உள்ள சமுதாயம் இரண்டு

1) ரஷ்யர்கள் 2) தமிழர்கள் 3) ஆங்கிலேயர்கள்
4) குஜராத்தியினர்.

**3.** $8 \times 6 + 5 - 2 =$

1) 48 2) 46 3) 51 4) மேற்கூறியவை ஒன்றுமல்ல.

www.tamilarangam.net

# பாலருக்கும் தமிழ் எழுத விரும்புபவர்களுக்கும் உயிர் எழுத்து.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | அம்மா | MOTHER | எ | எருது | BULL |
| | அப்பா | FATHER | | எல்லை | BOUNDARY |
| ஆ | ஆடு | SHEEP | ஏ | ஏரி | LAKE |
| | ஆணி | NAIL | | ஏர் | PLOUGH |
| இ | இரவு | NIGHT | ஐ | ஐப்பசி | OCTOBER |
| | இலங்கை | SRI LANKA | | ஐயம் | DREAD |
| ஈ | ஈ | FLY | ஒ | ஒட்டகம் | CAMEL |
| | ஈர்ப்பு | GRAVITY | | ஒற்றுமை | UNITY |
| உ | உலகம் | WORLD | ஓ | ஓடு | TILE |
| | உதவி | HELP | | ஓசை | SOUND |
| ஊ | ஊக்கம் | EFFORT | ஔ | ஔடதம் | MEDICINE |
| | ஊஞ்சல் | SWING | | ஔவை | NAME OF A TAMIL POETRESS |

ஃ ஆயுத எழுத்து (இதனைக் கொண்டு சொற்கள் ஆரம்பிப்பதில்லை.)

வெற்றிடங்களை நிரப்புக.

**4.** தலைக்கவசம் அணிபவர்கள் யார்?

1)விண்வெளி செல்பவர்கள் 2) ..............................

3).............................. 4)..............................

**5.** விண்வெளியிலுள்ள நட்சத்திரங்களின் எண்ணிக்கை........................

**6.** விண்வெளியூடாக பூமியை முதல் முறையாக சுற்றியவர்.................

**7.** உலகில் உள்ள பெரிய நாடு (பரப்பளவில்)..............................

**8.** உலகில் உள்ள எண்ணை வளம் கூடிய நாடுகளில் ஒன்று (தற்போது அதிகளவில் T.V. வானொலி, பத்திரிகை போன்றவற்றில் காண்பிக்கப்படுவதுடன் அதைப்பற்றி பேசவும் படுகிறது. )

அது எது?..............................




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நட்சத்திரங்கள் யார்? கோள்கள் யார்? சூரியர்கள் யார்?

நட்சத்திரங்கள் எல்லாம் வெகு தூரத்தில் உள்ள சூரியன்களே. ஆனல் இரவு நேரத்தில் தெரியும் புள்ளி வெளிச்சங்கள் எல்லாம் நட்சத்திரங்கள் அல்ல அவற்றுள் கோள்களும் (Planets) உள்ளன. நட்சத்திரங்களவு கோள்கள் வெகு தூரத்தில் இல்லை. அவை எம்முடைய பூமியுடன் சேர்ந்து சூரியனை சுற்றுகின்றன. அவைகளுக்கு தங்களுக்கென்று ஒளிரும் தன்மை இல்லை. எங்களுக்கு தெரிந்த வரை 9 (ஒன்பது) கோள்கள்(பூமியையும் சேர்த்து ) உள்ளன.கோள்கள் சூரியனில் இருந்து வரும் ஒளியைத் தெறிப்பதால் அவைகள் நட்சத்திரங்கள் போல் ஒளிர்கின்றன. சில கோள்கள் பூமிக்கு அண்மையில் உள்ளன. ஒருநாள் மானிடன் விண்வெளி விமானத்தின் (Rochet) மூலம் இன்னுமொரு கோளையடையலாம். இன்று வரை மனிதன் சென்றதெல்லாம் உபகோளான சந்திரனிற்குதான்.





சிரி......சிந்தி....

**ஆசிரியர் :** ஈழத்திலே அதிவிலை கூடிய ஜடப் பொருள் எது?

**மாணவன்:** மாப்பிள்ளை சேர்

**ஆசிரியா :** ..............?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண் விடுதலை என்றால் என்ன ?

பெண் விடுதலையா'............ அப்படிக் கேட்ட காலமெல்லாம் மலையேறி விட்டதய்யா.............. ஆண்கள் உரிமைக்காகச் சங்கம் வைக்க வேண்டியது தான் இனிமேல்.............!

இப்ப கொடுத்திருக்கிற சுதந்திரமே ரொம்ப அதிகம் ....... போதும் .....போதும்.... ஆம்! பெண்விடுதலை என்ற வார்த்தையைக் கேட்டவுடன் பலபேர் கூறுகிற நையாண்டி வார்த்தைகள் தான் மேலே தரப்பட்டிருப்பவை. எதார்த்த உண்மைகளுக்கு மாறாக இப்படியும் பேசுகிறார்களே என்ற வேதனை எழுந்தாலும் இதில் நாம் வியப்பதற்கு ஒன்றுமில்லை.ஏனெனில் தாழ்த்தப்பட்டிருக்கும் எந்தச் சமுகமானாலும் அது சாதியின் பேராலோ, நிறத்தின் பேராலோ, இனத்தின் பேராலோ, பொருளாதாரத்தின் பேராலோ, அல்லது சமுக அந்தஸ்தின் பேராலோ, (உயர் அதிகாரி கீழ் நிலை ஊழியன் )எதன் பேரால் தாழ்த்தப்பட்டிருந்தாலும் சரி தாழ்த்தப்பட்டவர்கள் தங்கள் உரிமைக்காக, முன்னேற்றத்திற்காக குரல் கொடுத்து எழும்பி வருகின்ற நேரத்தில் ஆதிக்கம் செய்து கொண்டிருப்பவர்கள் எழுப்பும் ஒருமித்த குரலே இப்படி நையாண்டியாக, தவறுகளை மிகைப்படுத்துவதாக, உண்மைகளைத் திரிப்பதாக வெளிப்படுகிறது. தங்களுடைய ஆதிக்கம் மதிப்பிழந்து போகும் நேரம் 'ஏதோ நடக்கக்கூடாத கெட்டவை நடப்பது போல்' ஒரு பிரமை அவர்களுக்கு. இவை சிலரிடம் அறியாமையினால் வந்தாலும் கூட பொதுவாக ஆணவத்தினாலும், அடக்கப்பட்டிருக்கும் சமுகம் முன்னேறுவது பொறுக்க முடியாத வயிற்றெரிச்சலினாலும் வரும் வார்த்தைகள். எனவே நம்மைப் பொறுத்தவரையில் இவ்வாதங்கள் அலட்ச்சியப்படுத்தப்பட வேண்டியவை. ஆனால், 'பெண் விடுதலை என்று நீங்க எதைச் சொல்றீங்க? என் மனைவிக்கெல்லாம் நான் முழுச்சுதந்திரம்(?) கொடுத்திருக்கிறேன் (??) எதுவுமே நான் அவங்களைக்கலந்து கொள்ளாமல் செய்வதில்லை. ஆகையினால் எங்கள் வீட்டிலெல்லாம் பெண் விடு தலைப் பிரச்சனை கிடையாதுங்க' என்று உண்மையாகவே அப்பாவியாகத் தெரிவிக்கும் அருமைத் தோழர்களுக்கும்

"என் வீட்டுக்காரரர் ரொம்ப ஒத்துழைப்பாருங்க என்னோட, என் மாமியாரும் எதிலேயும் தலையிட மாட்டாங்க. நான் கேட்காமலே என் கணவர் எனக்குப் புடவை வாங்கித்தந்து விடுகிறார் (!) சம்பளமோ என் கையில் கொண்டு வந்து கொடுக்கிறார்.(!!!) பெண் விடுதலை பேசுகிற அளவுக்கு எனக்கொரு பிரச்சனையும் இல்லீங்க" என்று அலட்சியமாகக் கூறி விட்டுக் கதவடைத்துக் கொள்ளும் அன்புத் தோழியருக்கும் 'பெண் விடுதலையின்' அடிப்படைகளை எடுத்துச்சொல்வது நம் கடமையாகிறது.புரிந்து கொள்ளுங்கள்:

பெண் விடுதலைப் போராட்டமென்பது நல்ல கணவன்மார்களுக்கான...... நல்ல மாமியார் மாமனார்களை உருவாக்குவதற்கான போராட்டம் அல்ல....

மாமியார் மருமகள் பிரச்சனையும், கணவன் மனைவி தகராறுகளும், வரதட்சணைக் கொலைகளும் கற்பழிப்புக் கொடுமைகளும் பெண்ணடிமையின் உச்ச வடிவங்கள்தாமே தவிர, பெண்ணடிமையின் ஆணிவேரும் அடிப்படைப் பிரச்சனைகளும் அவை அல்ல. நாம் இவற்றை(வரதட்சணை,கற்பழிப்பு, குடும்பக்கொடுமைகள்) எதிர்ப்போம். ஆனால் இவற்றோடு முடிந்து விடுவதல்ல பெண் விடுதலைக் குரல்! நமது இலட்சியமெல்லாம் பெண்கள் பொருளாதாரச் சார்பற்று தனித்து இயங்கும் தன்மைகளை, அதற்காக உரிமைகளை அடைவதுதான்.நாங்கள் கோருவதெல்லாம்:



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1. இன்று பெண்களுக்கு பாதுகாப்பற்றிருக்கும் இந்தச் சமூக விதிகளில் பெண்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொண்டு நடக்குமளவுக்கு வலிமையுள்ளவர்களாக உருவாகுதல் வேண்டும்.
2. சமூக, விஞ்ஞான, அரசியல் மற்றும் அனைத்துத் துறைகளிலும் சமபங்கு எண்ணிக்கையில் பெண்கள் பொறுப்பெடுக்க வேண்டும்.
3. ஆண்களின் ஆதிக்கத்துக்குக் கீழ் அழகுக் கவர்ச்சிப் பொம்மைகளாக பெண்கள் கலைத்துறைகளில்(திரைப்படத்துறையில்) பயன்படுவது மாறி, படத் தயாரிப்பாளர்களாகவும் இயக்குனர்களாகவும் அவர்கள் வளர வேண்டும்.
4. பெண்களை அடிமைத்தனத்தை வலிந்து ஏற்றுக்கொள்ளுகின்ற குடும்பத்தலைவியாக, கவர்ச்சிப்பொருளாக சித்தரிக்கும் பழைய, நவீன இலக்கியங்கள் அனைத்தும் பழம்பொருள் அங்காடிக்கு அனுப்பப்பட்டு, ஆண், பெண் சமத்துவ அடிப்படையில் புதிய மனித நேயத்துக்கான இலக்கியங்கள் உருவாக்கப்பட வேண்டும். அதன் படைப்புக்கர்த்தாக்களாக பெண்களும் சம எண்ணிக்கையில் உருவாகுதல் வேண்டும்.
5. சமூக அநீதிக்கு எதிரான உரிமைப் போராட்டங்களில் பெண்கள் ஆண்களோடு சரிநிகர் பங்கேற்க வேண்டும். அப்போதுதான் கிடைக்கும் உரிமைச் சமுதாயத்தில் பெண்களுக்கான நீதி இருக்கும்.

இது தான் பெண் விடுதலைப் பயணத்தின் பாதை என்பதை மனதில் நிறுத்தி இன்றைய சமுதாயத்தை பாருங்கள். கடக்க வேண்டிய தூரம் எவ்வளவு இருக்கிறது. என்பது புரியும் இந்த நிலைக்கு காரணம் என்ன?

முதலில் நாம் அடிமை வாழ்வு வாழ்கிறோம்.என்பதையே பெண்கள் உணராமலிருப்பது. மாறாக அந்த அடிமைத்தனத்தையே பெருமையெனக் கற்பித்து வைத்திருக்கும் சமூகக் கருத்தாக்கத்திற்குப் பலியாகி குடும்பங்களில் எவ்வளவு கொடுமை நடந்தாலும் தாங்கிக் கொள்வது. தன் குடும்பத்தில் தனக்கு அநீதி நடக்கிறது என ஒரு பெண் அதனை எதிர்த்து வெளிக்கிளம்ப எத்தனித்தால் அவதூறு என்னும் ஆயுதம் கொண்டு அதனை அடக்குவது. அந்த அவதூறு என்ற வெட்டி வார்த்தைகளுக்குப் பயந்து அவளும் அடங்கிப்போவது, வேலைக்குப் போகும் பெண்கள் தங்கள் அதிகப்படியான குடும்பச்சுமையை அமைதியுடன் ஏற்றுக்கொண்டு தங்கள் கணவன்மார்களை வீட்டுப்பொறுப்பில் பங்கெடுக்கும்படி வற்புறுத்தாமல், தங்களுக்குத் தேவையான ஓய்வு நேரத்தைக் கூட எடுத்துக் கொள்ளாமல் துன்புறுவது, அதனால் அவர்கள் படித்த கல்வி அவர்களின் மேற்கொண்டு சிந்தனை வளர்ச்சிக்குப் பயன்படாமல் துருப்பிடித்து அழிந்து போவது அரசியல் தங்களுக்குத் தேவையில்லாத ஒன்று என்று தவறாகப்பரப்பப்பட்டிக்கும் கருத்தினைப் படித்த பெண்களும் பெருமையுடன் கூறிக்கொள்வது, பல ஆண்களுக்கு மத்தியில் வேலை பார்க்குமிடங்களில் நல்ல திறமையாக வேலை செய்பவர் என்ற பட்டத்தினை பெறுவதை விட, 'அத்தனை ஆண்களிடமும் அடக்கமான பெண் என்ற பெயர் வாங்குவதையும் குறிப்பாகத் தன் மேலதிகாரியிடம் எதிர்த்துப் பேசாத பணிவுள்ள ஊழியை என்ற பெயரினைப் பெறுவதையும் குறிக்கோளாக வைத்துக் கொள்ளுதல், இதனால் பரந்து பட்ட திறமைகள் வளர வாய்ப்பின்றிப் போகும் நிலைமை.

சட்டரீதியாக பல உரிமைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் எதிர்த்து அந்த சட்ட உரிமைகளை பயன்படுத்த வேண்டுமோ அவர்களைச் சார்ந்தே பின்னும் அவள் வாழ்ந்து தீர வேண்டிய சமூக அமைப்பு! எனவே பயன்படுத்தப்படாமல் ஏட்டளவோடு நின்று கொண்டிருக்கும் சட்ட உரிமைகள் இத்தனை தடைகள், சுமைகள் இருக்கும் ஒரு சமுதாய அமைப்பில் பெண் விடுதலை குறித்த முழுமையாகச் சிந்திக்க முடிந்த பெண்களால் கூட நான் விடுதலை அடைந்த பெண் என்று சொல்லிக்கொள்ள முடியாது என்பதும், அவள் விரும்பினாலும் அப்படிவாழ அனுமதிக்கப்படமாட்டாள் என்பதிலுமே நடைமுறை உண்மைகளாக இருக்கும் போது எந்த ஓர் ஆணோ அல்லது ஓர் பெண்ணோ தன்னுடைய மனைவியோ அல்லது தானோ விடுதலையடைந்து விட்டதாகக் கூறுவதில் அர்த்தமிருக்க முடியுமா?


* எனவே 'பெண் விடுதலை' என்பது ஒரு குறிப்பிட்ட சாராரின் பிரச்சனையல்ல. அது நம் ஒவ்வொருவரின் தேவை. அதற்கான பணியில் அனைவரும் இணைவோம் வாருங்கள்.

*(* நன்றி: புதியகுரல் *)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




(எமனுக்கும் தூதுவனுக்கும் இடையில் நடப்பது போன்ற ஓர் சம்பாசணை),

எமன் : தூதுவா! நீ நேரடியாக கவச வாகனத்தை எடுத்து கொண்டு இலங்கை செல்லத் தயாராகு.

தூதுவன் : எதற்காக பிரபு கவச வாகனம்?

எமன் : எருமையில் போனால் உன்னை கொன்று விடுவார்கள் அதனால் தான் கவச வாகனத்தில் போகச் சொன்னேன்.

தூதுவன் : நன்றி பிரபே! நன்றி. நான் இலங்கை எதற்காக செல்ல வேண்டும்?

எமன் : எனது கணக்கின்படி ஜே.ஆரை கொன்று அவன் உயிரை எடுத்து வா. ஆனால் ஒன்று......

தூதுவன் : என்ன பிரபு?

எமன்: உயிரைக்கொண்டு வரும் போது கவனமாக ஓர் இரும்புப் பெட்டியில் போட்டு பூட்டிக் கொண்டுவா;

தூதுவன் : எதற்காக? எனக்கு ஒன்றும் புரியவில்லையே.

எமன் : நீ ஜே.ஆரை பற்றி ஒன்று அறியவில்லையா? சொல்கிறேன் கேள். தமிழ்பேசும் மக்களை அழிப்பதற்காக அவன் அவசரகாலச்சட்டம் பயங்கரவாதத் தடைச்சட்டம் என்று கொண்டுவந்தான். அதுமட்டுமல்ல, முஸ்லிம் தமிழ் மக்களிடையே கலவரங்களை உண்டுபண்ணினான். போராளிகளைக் கொல்வது என்ற பேரில் தமிழ் பேசும் மக்களைக் கொன்றான். கடைசி காலத்தில் சர்வசனவாக்கெடுப்பு என்று திருகு தாளம் போட்டான்.

தூதுவன் : அவன் கில்லாடி போல் உள்ளதே!

எமன்: கில்லாடியா? இன்னும் சொல்கிறேன் கேள். போராளிகளுடன் போராடமுடியாது என்று தெரிந்தவுடன் தன் தலையைப் போலவே உள்ள இன்னொரு அயல்நாட்டவன் ஒருவனை சினேகிதம் பிடிச்சான். பிறகு காலிலை விழுந்து கெஞ்சி அவனை உள்ளுக்குக் கூப்பிட்டான். அவனையும் தமிழர்களையும் கொழுவிவிட்டுட்டு அவன் தன்ரை ஆமியுடன் கொழும்பிலை சிரித்துக்கொண்டிருந்தான்.

(தொடரும்).

ஈழவிழி

www.tamilarangam.net


# PILAZA SUPER MARKET

215 Tooting High Street

News, Tobbacco, Groceries
Fruits & Vegetables
Video Films - Hire

**We Are Open Late**
**7 Days A Week**

Opening Hours Mon-Sun
7.00 a.m - 10.00p.m

## SAMRAS TAMIL MOVIE HOUSE

HIGH QUALITY
VIDEO, AUDIO RECORDING
VIDEO FILMS FOR HIRE AND SALE

OLD AND LATEST AUDIO
COMPACT DISK & RECORDS
FOR SALE

60, Haydons Road
London SW19 1HL
U.K.

Phone : 081 - 542 9572.

Global -

## COM-PRINTS

176, MITCHAM ROAD,
TOOTING,
LONDON SW17 9NJ.
TEL: 081-682 3890

We undertake the following work at reasonable rates:

**PRINTING:**

Letter Heads, Business Cards, Complement Slips, Invoices.

Wedding Cards, Invitation Cards.

Leaflets, Posters, Tickets.

**TYPESETTING:**

In Tamil and English.

Outputs from 300dpi to 2450dpi on Plain paper, Bromide & Film.
Negative or Positive outputs.

**MAGAZINES & BOOKLETS:**

English & Tamil.

**ARTWORK, LOGO DESIGNING.**

*FOR PROMPT SERVICE AT REASONABLE RATES.*
CALL US ON 01/081 682 3890

OPEN - MONDAY TO FRIDAY 10AM TO 8PM.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கூர்ப்படைந்ததாலே..........................

குரங்குபோல வாழ்ந்த மனிதன் கூர்ப்படைந்ததாலே
இரங்குகின்ற மனம் மாறிப் போனதென்ன மாயம்
உறக்கமின்றி வாழும் அந்த மங்கையர்கள் கழுத்தில்
இறங்கிடுமா தாலி பணம் இல்லாமலே ஒருநாள்
ஆணைப் பெற்ற பெண்மையவள் ஆணித்தரம் கொள்ள
பெண்ணைப் பெற்ற பெண்மையுளம் வெந்து போகுதம்மா
கண்ணில் இரு கங்கை நதி பெருக்கெடுத்து ஓட
எண்ணி அழும் மங்கையரின் வாழ்வு வளம் பெறுமா?

வேட்டியது கட்டியதில் ஆடவராய்த் தோன்றும்
காட்டுயிரைக் காட்டிலும் கேவலமாம் இவர்கள்
கேட்பதாலே சீதனம் இல்லையவர்க்குத் திருமணம்
நாட்டில் இந்த நிலையும் மாற முன்வருமா ஆண் இனம்
பெண்ணைப் பெற்ற தாயவளோ கண்கலங்கிப் போகையில்
ஆணைப் பெற்ற அகங்காரத்தில் கேட்கிறாளே சீதனம்
நேற்று அவள் மணத்திற்காக பணத்தைக் கேட்ட வேளையில்
வடித்த நீரை மறந்ததென்ன மங்கையவள் உள்மனம்.

பிணத்தைக் கூட மாலையிடத் தயங்கமாட்டார், சில ஆடவர்
பணத்தை மட்டும் முன்னே வைத்து பேசும் போது திருமணம்
குரங்குதானே மூதாதை என்றறியச் சீதனம்
கேட்பவரின் குணத்தை விட வேறெதற்கு உதாரணம்
பணம் நகையே வாழ்க்கை என்று பரிதவிக்கும் கூட்டமே
குணம் குலைந்து பித்தர்களாய் போவதென்ன காரணம்
சீதனம் தான் வாழ்க்கை என்று அலையும் நிலை மாறவே
வேதம் இன்றித் தாலி கட்ட ஒன்று இங்கே கூடுங்கள்.

இசசஞசிகையில் வரும் சகல ஆககஙகளுககும் . அவவாககஙகளை எழுதியவாகளே பொருப்பாளிகளாகும்

அச்சுப்பதிப்பு செல்வம் அச்சகம் 081 - 478 6766

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்